**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.O.S. 70/2022**

**Deposition of P.W.6 – டாக்டர். திருமதி. சினி பி பேன்ஸ்**

**Dated: 19.11.2025**

**Accused Present.**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

காயம்பட்டவர் முதுகு மற்றும் இடது கையில் கம்பால் அடிப்பட்ட காயம் ஏற்பட்டதாக கூறினார். மேற்படி இடங்களில் வெளிக்காயங்கள் இல்லை. பொதுவாக காயம்பட்ட நபர் சிகிச்சைக்கு வரும் போது அவருக்கு பொதுவாக சில பரிசோதனைகள் செய்வோம் என்றால் சரிதான். கல்லீரல் வயிற்றின் வலது மேல் பக்கத்தில் இருக்கும் என்றால் சரிதான். ரத்தத்தை வடிக்கட்டி நச்சுகளை நீக்குவது கல்லீரலின் பணி என்றால் சரிதான். காயம்பட்டவருக்கு கல்லீரலில் காயம் இல்லை. Spleen-ல் காயம் இருந்தது. காயம்பட்ட நபருக்கு Spleen-ல் காயம் இல்லை என்றால் சரியல்ல. சாதரணமாக கீழே விழுந்தால் கூட மண்ணீரலில் காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். காயம்பட்டவர் என்னிடம் வயிற்றில் அடிப்பட்டதாக கூறவில்லை.